(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 76.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 யூலை 11 வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

11/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 10 மில்லியன் LED மின்குமிழ்களை வாடிக்கையாளர்களிடையே பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்திற்கு செலவான பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட பணத் தொகையை மின் வாடிக்கையாளர்களிடமிருந்து மீளஅறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது அநீதியானது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தை வழிப்படுத்திய நிறுவனம் யாது என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் தோல்வியடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

92/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அழிக்கப்பட்டுள்ள தொல்லியல் இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களின் பெயர்களை குறிப்பிடுவாரா;

(iii) மேற்படி தொல்லியல் இடங்களை அழிப்பதற்கான காரணங்கள் யாவை;

(iv) சம்பந்தப்பட்ட தொல்லியல் இடங்களை அழித்த ஆட்கள் இனங்காணப்பட்டுள்ளனரா;

(v) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவை;

(vi) இனங்காணப்படாத ஆட்களால் அழிக்கப்பட்டுள்ள தொல்லியல் இடங்களின் எண்ணிக்கை யாது;

(vii) நாடொன்றின் வரலாற்றுப் பெருமையை பாதுகாக்கின்ற தொல்லியல் இடங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை குறிப்பிடுவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

3.

149/ ' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை சிறு போகம் மற்றும் பெரும் போகத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு ஒவ்வொரு மாவட்ட வாரியாக தனித்தனியாக யாது என்பதையும்;

(ii) அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நெல்லிலிருந்து அரிசியாக்கப்பட்டு உள்நாட்டுச் சந்தைக்கு அனுப்பப்பட்ட அரிசியின் அளவு யாது என்பதையும்;

(iii) இக்காலப் பகுதியில் விலங்குத் தீவனத்திற்காக நெல் விற்கப்பட்டிருக்குமாயின், அவ்வாறு நெல்லை கொள்வனவு செய்த ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்களும் விலைகளும் தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

221/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை இராணுவத்தில், இலங்கைக் கடற்படையில் மற்றும் இலங்கை விமானப் படையில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் இவர்களின் இலங்கை மருத்துவ சங்கப் பதிவு இலக்கங்கள் ஒவ்வொரு படைகளுக்கும் ஏற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

267/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வவுனியா மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

366/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான க்ரெட்வெலி தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

7.

550/ '19

கௌரவ சி. சிறீதரன்,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நாட்டிலுள்ள இருபத்தைந்து மாவட்டங்களிலும் கிரிக்கெட் சங்கங்கள் இருபத்தைந்து உள்ளனவா என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திற்காக கிரிக்கெட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இதுவரை அனுமதி வழங்காமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(iii) கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் சங்கமானது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பதிவிற்காகப் பலமுறை விண்ணப்பித்த போதிலும், இதுவரை அதனைப் பதிவு செய்யாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டின் பின்னர், கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு உங்களது அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள உதவிகள் எவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

573/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையை தனியார்மயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணம் யாது என்பதையும்;

(iii) இலங்கை மின்சார சபை நட்டம் அடைவதை தடுப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) மின்சார வாடிக்கையாளர்களினால் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் கணிப்பிடப்படுகின்ற தற்போதைய முறை அநீதியானது என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

603/ '18

கௌரவ வாசுதேச நாணாயக்கார,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்சார இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காக குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு ரூபா 40,000/- ஐக் கடனாக வழங்கி அதற்கான தவணைக் கட்டணத்தை மாதாந்த மின் கட்டணப் பட்டியலுடன் இணைத்து செலுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த வசதி இன்றளவிலும் நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் வீடொன்றுக்கான மின் சுற்றுக் கம்பிகளை இணைக்கையில் 05 மின் குமிழ்கள், 01 செருகி மற்றும் மின் வழங்கல் பெட்டி ஒன்றுக்காக சுமார் ரூபா 21,000 அறவிடப்படுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், இக்கட்டணம் சந்தைக் கட்டணத்தை விட எவ்வளவு அதிகரிக்கின்றது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

607/ '18

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் நாளாந்த மின் அலகு உற்பத்தி யாது என்பதையும்;

(ii) நாளாந்த மின் அலகு கேள்வியானது பகல், இரவு அடிப்படையில் யாது என்பதையும்;

(iii) நாளொன்றுக்கு தனியார் துறையின் மின் அலகுப் பங்களிப்பு;

(iv) நாளொன்றுக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின் அலகுகளின் எண்ணிக்கை;

தனித்தனியே யாது என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) "சூர்ய பல சங்கிராமய" நிகழ்ச்சித்திட்டத்தின்,

(i) அடிப்படை நோக்கம் யாது என்பதையும்;

(ii) அதன் பயன்கள் யாவை என்பதையும்;

(iii) உங்கள் அமைச்சின் செயற்பணி யாது என்பதையும்;

(iv) சூரியசக்தி கருத்திட்டங்களை அமுல்படுத்துகின்ற பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நிறுவனங்களைப் பதிவு செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்படுகின்ற நியமங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இலங்கை ஒரு தீவாக இருப்பதனால் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமொன்றாக கடல் அலைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு உள்ள நிலையில், அமைச்சினால் அது தொடர்பில் குறிப்பிடத்தக்களவு ஊக்கம் செலுத்தப்படுவதில்லை என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

620/ '18

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— நெடுஞ்சாலைகள், வீதிகள் அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாவலபிட்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் நாவலபிட்டிய நகரின் வாகன நெரிசலை குறைக்கும் நோக்கில் வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபையினால் 300 இலட்சம் ரூபாய் செலவில் நாவலபிட்டிய நகர மத்தியில் மேம்பாலமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா?

(ii) தற்போதைய நாவலபிட்டிய நகரசபை நிர்வாகத்தினர் வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியின்றி மேற்படி அரச சொத்தினை தகர்த்து விற்பனை செய்வதற்கு உத்தேசித்துள்ளார்கள் என்பதை அறிவாரா?

(iii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட இப் பாலத்தை தங்களின் அமைச்சின் அனுமதியின்றி தகர்த்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

637/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய லொத்தர் சபையினால் வெளியிடப்படும் லொத்தர் சீட்டுக்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2010 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையில் அந்த ஒவ்வொரு லொத்தர் சீட்டு தொடர்பிலும்,

(i) விற்பனையில் கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(ii) விற்பனையில் கிடைத்த வருமானத்தில் வெற்றி பெற்றவர்களுக்காக ஒதுக்கப்படும் தொகை அல்லது மொத்த வருமானத்தின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

(iii) விற்பனையின் பின்னர் குறைந்த வெற்றித் தொகையிலிருந்து அதிகூடிய வெற்றித்தொகை வரை வெற்றியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) வெற்றிக்குரிய லொத்தர் சீட்டு விற்பனை செய்யப்படாமை அல்லது விற்பனை செய்யப்பட்ட வெற்றிக்குரிய லொத்தர் சீட்டு உரிமையாளர் வெற்றியைப் பெற முன்வராமையினால் அரசாங்கத்திற்கு வருடாந்தம் எஞ்சிய தொகை எவ்வளவென்பதையும்;

ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

676/ '19

கௌரவ சந்திம கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் 368 இலட்சம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டு NELSIP கருத்திட்டத்தின் மூலம் கெக்கிராவ விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யப்பட்டது என்பதையும்;

(ii) கருத்திட்டத்தில் இடம்பெற்ற முறைகேடுகளின் காரணமாக கருத்திட்டத்தை கைவிட நேர்ந்தது என்பதையும்;

(iii) கெக்கிராவ பிரதேச இணைப்பாக்கக் குழுவினால் அனுராதபுரம் உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் மற்றும் NELSIP கருத்திட்டத்தின் பணிப்பாளரின் மூலம் தரக் கட்டுப்பாடு, தரநியமம் மற்றும் செலவிடப்படுகின்ற தொகை தொடர்பாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ள போதிலும் அத்தகையதொரு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தில் சுமார் 35 இலட்சம் ரூபாவிலான ஊழல் மோசடி இடம் பெற்றுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேச சபைத் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் என்போரின் தேவையின் அடிப்படையில் மேற்படி விளையாட்டு மைதானத்தினை பொதுமக்களின் பயன்பாட்டுக்காக வழங்குவதற்கும் விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவதற்கு முன்னர் இசைக் கச்சேரி ஒன்றினை நடாத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) இச்செயன் முறையின் மூலம் இடம்பெற்ற ஊழல் மோசடிகளை மூடி மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கும் விளையாட்டு மைதானத்தினை பொது மக்களுக்கு ஒப்படைக்கும் வரை பயன்படுத்தாமல் தாமதப்படுத்துவதற்கும் கட்டளையிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

14.

682/ '18

கௌரவ கனக ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தினால் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட விமானமொன்று இந்நிறுவனத்தினால் குத்தகை அடிப்படையில் வேறு நிறுவனமொன்றுக்கு மீளளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி விமானம் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட லீசிங் நிறுவனத்திற்கு ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தினால் செலுத்தப்படும் மாதாந்த குத்தகை தவணைப் பணம் எவ்வளவென்பதையும்;

(iii) மீண்டும் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிறுவனத்தினால் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு செலுத்தப்படும் மாதாந்த குத்தகை தவணைப் பணம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி விமானம் விமானப் பயண அனுமதிப்பத்திரம் மற்றும் சிவில் விமானங்கள் பதிவு பட்டியலுக்குள் உள்ளடக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி விமானத்திற்கு பதிவிலக்கம் இருக்குமெனின், அவ்விலக்கம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

687/'18

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிராந்திய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிகளுக்காக (MA 03-iii தரம்) தகுதி வாய்ந்தவர்களைத் தெரிவு செய்வதற்காக நேர்முகப் பரீட்சையொன்று நடத்தப்பட்டது என்பதையும்;

(ii) அந்த பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு அவர்கள் சித்தியடைந்துள்ளதாகவும் அப்பதவிகளுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அதற்குரிய நியமனக் கடிதம் உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படுமென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவியின் ஒப்பத்துடன் NCPA/AU/418(i)(06) ஆம் இலக்க மற்றும் 2017.12.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நுகேகொட, உடஹமுல்ல, கும்புக்கன்கஹ பொக்குன வீதி, 3 ஆம் மாவத்தை, 58/5 இலக்கமுடைய வீட்டில் வதியும் திருமதி. எச். எல். ஏ. லுணுவில அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆட்களுக்குப் பதிலாக அரசியல் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு வேறு குழுவினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) திருமதி லுணுவில உள்ளிட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், குறிப்பிட்ட நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்),— 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“இலங்கை பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் நிறுவகத்தினைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பிரதம அமைச்சர், அமைச்சரவை உள்ளிட்ட அரசாங்கம் மீதான நம்பிக்கையின்மை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 10, 2019) “2019 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற தற்கொலை பயங்கரவாத தாக்குதல்கள் காரணமாக இலங்கைப் பிரசைகள் உள்ளிட்ட இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் படுகொலை செய்யப்பட்டமை, மேலும் ஐநூறுக்குக் கிட்டிய எண்ணிக்கையுடையோர் காயமடைந்தமை மற்றும் மேற்படி குண்டுத் தாக்குதல் காரணமாக ஏற்பட்ட ஆதனச் சேதம் தொடர்பில் பிரதம அமைச்சர், அமைச்சரவை மற்றும் அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வரீதியாக தகவல்கள் கிடைத்திருந்தபோதிலும் வன்மமான உதாசீனத்துடன் கீழே குறிப்பிட்ட செயல்களைப் புரிந்தமை அல்லது புரியாமல் விட்டமையால் :—

(அ) 2019.05.08 ஆம் திகதி பிரதம அமைச்சர் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிலிருந்து ஐஎஸ்ஐஎஸ் (ISIS) சர்வதேச இஸ்லாம் தீவிரவாத அமைப்புடன் இலங்கையைச் சேர்ந்த குழுவினர் உறவுகளைப் பேணிவந்ததாகவும் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததாகவும் அறிந்திருந்தும் அது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியமை;

(ஆ) பல்வேறு இஸ்லாம் சமய தீவிரவாத அமைப்புகள் முஸ்லீம் சமூகத்தில் இயங்கி வருவதாக முஸ்லீம் சமுதாயத்தினராலேயே பல்வேறு விதத்தில் அரசாங்கத்திற்கும் பொறுப்புக்கூறவேண்டிய நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வூட்டி இருக்கையில் அது சம்பந்தமாக செயலாற்றத் தவறியமை;

(இ) காத்தான்குடி பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள்மீது பல்வேறு சந்தர்ப்பங்களில் விடுத்துள்ள எச்சரிக்கைகள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பாக 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி குண்டு வெடிக்கச் செய்வித்து இறந்த சஹரான் ஹஷீம் மற்றும் 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி சாய்ந்தமருதுவில் குண்டு வெடிக்கச் செய்வித்து இறந்த ஏ.எல்.எம். நியாஸ் ஆகியவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினால் பிடியாணை விடுத்துள்ள போதிலும் மற்றும் மேற்படி பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் காத்தான்குடி பிரதேசத்தில் வெளிப்படையாகவே பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களை கைதுசெய்யவோ அல்லது உரிய சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளவோ தவறியமை;

(ஈ) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 24 ஆம் திகதி மாவனெல்லையில் புத்தர் சிலைகளை சேதப்படுத்தல் தொடர்பாக சஹ்ரான் ஹஷீம் முதன்மையாகக்கொண்ட குழுவொன்றுக்கு தொடர்பு இருப்பதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் பேரவையினால் தேசிய புலனாய்வு பிரிவிற்கு 2018 திசெம்பர் 28 ஆம் திகதி அறிவித்துள்ள போதிலும் மற்றும் இத்தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சிலர் கைதுசெய்யப்பட்ட போதிலும் விசாரணைகள் முன்னெடுப்பதைத் தடுத்து அதில் தலையீடுகள் மேற்கொண்டதாக அரசாங்கத்தின் அமைச்சரொருவரை குறிப்பிட்டிருந்தமை;

(உ) மேற்படி தாக்குதல்களுக்கு கணிசமான காலத்திற்கு முன்பிருந்தே இலங்கைக்குள் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் பல்வேறு செயற்பாடுகள் தொடர்பாக விசேடமாக கணிசமான எண்ணிக்கைகொண்ட இலங்கையர் ஐ.எஸ்.ஐ.எஸ். (ISIS) அமைப்பில் சேர்ந்து செயற்படுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான சட்டரீதியான மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளத் தவறியமை;

(ஊ) பாதுகாப்பு சபையின் அங்கத்தவராகிய பிரதம அமைச்சர், பாதுகாப்புச் சபை கூட்டத்தொடர்களில் கலந்து கொள்ளாமையின் மூலம் நாட்டு மக்களுக்கு அவரால் ஆற்றப்பட வேண்டிய அடிப்படைப் பொறுப்புகளைத் தவறவிட்டமை;

(எ) இலங்கையில் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களை இலக்குவைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், இதனுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் அவர்களது தொலைபேசி இலக்கங்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் உள்ளிட்ட உரிய தகவல்கள் வெளிநாட்டு புலனாய்வு சேவைகளினால் வழங்கப்பட்டிருக்கையில், அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதைத் தவறவிட்டமை;

மேலும் 2019.04.21 ஆம் திகதி, குறிப்பிட்ட தாக்குதல்களுக்கு முன்னதாக குறிப்பிட்ட வெளிநாட்டு புலனாய்வு சேவைகள் மீண்டும் இத் தாக்குதல்கள் தொடர்பில் திட்டவட்டமான முன்னெச்சரிக்கைகளை விடுத்திருக்கையில் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதைத் தவறவிட்டமை;

(ஏ) 2019.04.11 ஆம் திகதி பிரதி பொலிஸ் மா அதிபர் - விஷேட பாதுகாப்பு பிரிவின் திரு. பிறியலால் தசநாயக்க, "Information of an alleged plan attack" எனும் தலைப்பு மற்றும் DIG/SPR/126/4.19 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம், 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி திட்டவட்டமான இடங்களை இலக்குவைத்து திட்டமிடப்பட்ட கொலைத் தாக்குதல் இடம்பெறுமென அதாவது “தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் மொஹமட் சஹ்ரான் இந்நாட்டில் தற்கொலைத் தாக்குதல் ஒன்றை நடாத்துவதற்கு திட்டமிடுவதாக கிடைத்த தகவல் தொடர்பாக அரச புலனாய்வு சேவையினால் வழங்கப்பட்டிருந்த அறிக்கையில் உள்ளடங்கிய விடயங்கள் தொடர்பாக விசேட கவனத்தினைச் செலுத்தி" எனப்படும் கடிதம் பின்வரும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள அதாவது;

- பணிப்பாளர்/ அமைச்சர் பாதுகாப்புப் பிரிவு
- பணிப்பாளர்/ நீதித்துறை பாதுகாப்புப் பிரிவு
- பணிப்பாளர்/ ஓய்வு பெற்ற சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு
- பதில் பணிப்பாளர்/ தூதுவர் பாதுகாப்புப் பிரிவு (iv)
- பதில் பணிப்பாளர்/ ஓய்வு பெற்ற சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு (v)

ஆகியோருக்கு முதலில் வழங்கப்பட்டிருத்தலும் அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது புறக்கணிக்கப்பட்டிருத்தலும் ஆகிய மேற்படி விடயங்களின் பிரகாரம் 2019.04.21 ஆம் திகதி சிவில் மக்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைக் கட்டாயமாகத் தடுப்பதற்கு அல்லது சேதத்தினைக் குறைத்துக் கொள்ள இயலுமானதாக இருந்ததனாலும்;

(ஐ) 2019.04. 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தொடர் தாக்குதலின் பின்னர் பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சர்கள் அத்தாக்குதல் தொடரின் பொறுப்பினை ஏற்காமல் அப்பொறுப்பினை வேறு தரப்புகளுக்குச் சாட்டுவதற்கு முயற்சித்துக்கொண்டு, அரசாங்கத்தின் அமைச்சர்கள் பொறுப்பற்றதும், ஒன்றுக்கொன்று முரணானதும் பொய்யானதுமான கூற்றுக்களை முன்வைத்து நாட்டின் இயல்பு வாழ்க்கை மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு என்பன தொடர்பாக குழப்பமானதும் பாதுகாப்பற்றதுமான நிலைமை ஏற்படக்கூடிய வகையில் செய்யப்பட்டுள்ளதனாலும்;

(ஒ) 2019.04.21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பான புலனாய்வுச் செயன்முறைக்கு தடைகளை ஏற்படுத்தியும், அக் குற்றச்செயல்கள் தொடர்பாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தடைகளை ஏற்படுத்தியும் அல்லது தடுத்தும் அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் செய்யப்பட்டுள்ளதனாலும்;

(ஓ) 2019.04.21 திகதி மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தொடர் தாக்குதல்களின் பின்னர் மீண்டும் அவ்வாறானதொரு தொடர் தாக்குதல் மேற்கொள்ளப்படுதல் அல்லது வேறு வகையிலான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதை தடுப்பதற்கு அவசியமான பூரணமான சட்டங்கள் இலங்கை அரசிடம் காணப்பட்ட போதும், 2019.05.13 திகதி கம்பஹா பிரதேசத்திலும் வடமேல் மாகாணத்திலும் மேற்கொள்ளப்பட்ட தீவிரவாத வன்முறைச் சம்பவங்கள் அதாவது ஆட்கொலைகள், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் மக்களிடையே மோதல்கள் ஏற்படுவதை தடுப்பதற்காக உரிய கவனத்துடனும் பொறுப்புடனும் நடந்துகொள்ளாமை அத்துடன் அவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய உரிய வழிமுறைகளை முறையாக பின்பற்றாததால் பொதுமக்கள் தொடர்பில் அரசாங்கத்தால் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படுவதை தவறவிட்டமை அத்துடன் 2019.04.21 திகதி நடத்தப்பட்ட தொடர் தாக்குதல்களின் பின்னர் நாட்டிலுள்ள பல்லின மக்களிடையே அமைதியின்மை மற்றும் தாக்குதல்களில் ஈடுபடுவதற்கான முனைப்பு காணப்பட்ட போதும் அவ்வாறான தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்காததாலும்;

(ஔ) மேற்சொல்லப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் நாட்டின் வழமையான பொருளாதார செயற்பாட்டினை மீண்டும் கட்டியெழுப்புவதில் தோல்வி கண்டுள்ளதாலும், நாட்டில் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கல்விச் செயற்பாடுகளை மீண்டும் கட்டியெழுப்பத் தவறியுள்ளதாலும், அரச மற்றும் தனியார் துறையின் செயற்பாடுகளை மீள இயல்பு நிலைக்கு கொண்டு வர தவறியுள்ளதாலும் அரசாங்கம் என்ற வகையில் நாட்டு மக்களுக்கு தாம் ஆற்ற வேண்டிய பொறுப்புகளையும் கடமைகளையும் ஆற்றுவதற்கு தவறியுள்ளதாலும்; மற்றும்

2019.04.21 ஆம் திகதியன்று இடம்பெற்ற தொடர் தாக்குதல்களை தடுக்க தவறியுள்ள காரணத்தினாலும் அதைத் தொடர்ந்தும் கூட நாட்டின் பாதுகாப்பு நிலைமை மற்றும் சிவில் மக்கள் வாழ்வை இயல்பு நிலைக்கு கொண்டு வராத காரணத்தினால் ஏற்பட்டுள்ள அராஜக நிலைமையின் பேரில் நாட்டின் உள்ளக நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கு வெளிநாடுகளுக்கு இடமளிக்கும் வகையில் செயற்பட்டுள்ளதாலும்;

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம அமைச்சர், அமைச்சரவை உள்ளிட்ட அரசாங்கம் மீது இனியும் நம்பிக்கை இல்லை என இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப் பெற்றது. [பா. 62/ ’19]

* 2.

அரச காணி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிருவாக மாவட்டங்கள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1955 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிருவாக மாவட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ்:-

(அ) 1955 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, நிருவாக மாவட்டங்கள் சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கொழும்பு நிருவாக மாவட்டத்தின் அதிகார இடப்பரப்பும் எல்லைகளும், கொழும்பு நிருவாக மாவட்டத்தின் அதிகார இடப்பரப்பினுள்ளும், எல்லைகளினுள்ளும், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட "கொழும்புத் துறைமுக நகரம்" என அறியப்படும் மீட்டெடுக்கப்பட்ட காணி இடப்பரப்பை உள்ளடக்குவதன் மூலம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய மீட்டெடுக்கப்பட்ட காணி இடப்பரப்பு கொழும்பு நிருவாக மாவட்டத்தில் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கப்படுதல் வேண்டுமெனவும்

இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

பின்வரும் தொடுப்புப் புள்ளிகளில் மேல் மாகாணத்தில், கொழும்பில் அமைந்துள்ளதும் பரப்பளவில் 446.6153 ஹெக்டயர்களைக் கொண்டுள்ளதும் நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட 2019.06.11 ஆம் திகதிய CO/DSO/2019/370 ஆம் இலக்கப் படியெடுப்பில் குறித்துக் காட்டப்பட்டதும், "கொழும்புத் துறைமுக நகரம்" எனவழைக்கப்பட்டு அறியப்படுவதும் காணித்துண்டுகள் 2 முதல் 7 வரையாக அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அக்காணித்துண்டின் எல்லைகள் பின்வருமாறு:-

| **தொடுப்புப் புள்ளி - கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவின் மேற்கெல்லை** | **கிழக்கு ஆயத்தொலை** | **வடக்கு ஆயத்தொலை** |
|---|---:|---:|
| வடக்குத் தொடுப்புப் புள்ளி | 396913.476 | 492847.764 |
| தெற்குத் தொடுப்புப் புள்ளி | 397077.037 | 492290.222 |

(குறிப்பீட்டு ஆயத்தொலை முறைமை: இலங்கைக் கட்டுப்பாட்டு வலை 1999)

1. **காணித் துண்டு இல. 2 : பரப்பளவு: 155.8376 ஹெக்.**

| | |
|---|---|
| வடக்கில் - | காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 1, கொழும்புத் துறைமுகம் அத்துடன் சைத்திய வீதி |
| கிழக்கில் - | காணித்துண்டம் இல.1, கொழும்புத் துறைமுகம், சைத்திய வீதி, இந்து சமுத்திரம் மற்றும் காணித்துண்டு இல. 7 |
| தெற்கில் - | இந்து சமுத்திரம், காணித்துண்டங்கள் இல. 7, 6 மற்றும் 3 |
| மேற்கில் - | காணித்துண்டங்கள் இல. 6, 3 மற்றும் 6 |

2. **காணித் துண்டு இல. 3 : பரப்பளவு : 15.0933 ஹெக்.**

| | |
|---|---|
| வடக்கில் - | காணித்துண்டம் இல. 2 |
| கிழக்கில் - | காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 6 |
| தெற்கில் - | காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4 |
| மேற்கில் - | காணித்துண்டங்கள் இல. 4 மற்றும் 6 |

3. **காணித் துண்டு இல. 4 : பரப்பளவு : 113.5311 ஹெக்.**

| | |
|---|---|
| வடக்கில் - | காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 3 |
| கிழக்கில் - | காணித்துண்டங்கள் இல. 3 மற்றும் 6 |
| தெற்கில் - | காணித்துண்டங்கள் இல. 6, 5 மற்றும் 6 |
| மேற்கில் - | காணித்துண்டங்கள் இல. 6, 5 மற்றும் 6 |

4. **காணித் துண்டு இல. 5 : பரப்பளவு : 14.7856 ஹெக்.**

| | |
|---|---|
| வடக்கில் - | காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4 |
| கிழக்கில் - | காணித்துண்டங்கள் இல. 6 மற்றும் 4 |
| தெற்கில் - | காணித்துண்டம் இல. 6 |
| மேற்கில் - | காணித்துண்டம் இல. 6 |

5. **காணித் துண்டு இல. 6: பரப்பளவு : 101.1038 ஹெக்.**

| | |
|---|---|
| வடக்கில் - | காணித்துண்டங்கள் இல. 7, 1, 2, 3, 4, 5, 4, 3 மற்றும் 2 |
| கிழக்கில் - | காணித்துண்டங்கள் இல. 1, 2, 3, 4, 5, 2 மற்றும் 7 |
| தெற்கில் - | காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 7 |
| மேற்கில் - | காணித்துண்டங்கள் இல. 2 மற்றும் 7 |

6. **காணித் துண்டு இல. 7 : பரப்பளவு : 46.2639 ஹெக்.**

| | |
|---|---|
| வடக்கில் - | இந்து சமுத்திரம், காணித்துண்டங்கள் இல. 1, 6 மற்றும் 2 |
| கிழக்கில் - | காணித்துண்டங்கள் இல. 1, 6 மற்றும் 2 அத்துடன் இந்து சமுத்திரம் |
| தெற்கில் - | இந்து சமுத்திரம் |
| மேற்கில் - | இந்து சமுத்திரம் |

* 4.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1) ,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில், அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 05 ஆம் திகதிய 2113/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.06.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2) ,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில், அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 05 ஆம் திகதிய 2113/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.06.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

மக்கள் வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 8.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 15.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 19.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.).

21.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.